தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-3-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலையில் பயிர் நடவு துவக்க விழா**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் இளநிலை இளம் அறிவியல் மூன்றாம் ஆண்டு பாடப்பிரிவில், முதல் ஆண்டு மாணவர்களின் பாடத்திட்டத்தில் உழவியல் பாடப்பிரிவில், முதல் இரண்டு ஆண்டுகளில் பயிர் சாகுபடி பற்றி படித்து தெரிந்து கொண்டு, பின் வரும் இரண்டு ஆண்டுகளில் அவற்றை களப் பணிகளில் செயல்படுத்துவர்.

அந்தக் களப் பணி அனுபவம் மூன்றாம் ஆண்டில் தொடங்கப்படுகிறது. ஐந்தாவது பருவத்தில் பருத்தி சாகுபடி செய்து, ஆறாம் பருவத்தில், நெற்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் (ADT-43 ரகம்) விதையை விதைத்து, அதை நடவு செய்கின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் 5 சென்ட் நிலம் இதற்கென ஒதுக்கப்படுகிறது. அதில் பெறப்படும் லாபம் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும்.

நடவு நடும் விழாவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் நீ. குமார் மற்றும் பயிர் மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் வெ. கீதாலட்சுமி, வேளாண்மைக் கல்லூரி முதல்வர் முனைவர் ம. கல்யாணசுந்தரம் மறறும் பிற அதிகாரிகளும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு மாணவர்களை ஊக்குவித்து நெல் நடவு விழாவை துவக்கி வைத்தனர். மூன்றாம் ஆண்டு இளநிலை மாணவர்கள் கிட்டதட்ட 120 பேர் கலந்து கொண்டு பயிர் நடவும் பணியில் ஈடுபட்டனர்.

உழவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சி.ஆர். சின்னமுத்து, மற்றும் இப்பாடத்தின் ஆசிரியர்கள் முனைவர். ந. தவப்பிரகாஷ், முனைவர் ஆர். கார்த்திகேயன் முனைவர் செ.க. நடராஜன் ஆகியோர் இந்த நடவு விழாவை நன்செய் பண்ணையில் சிறப்பாக நடப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்